www.tamilarangam.net

# சிறுவர் அமுதம்

19.05.98

எண்ணம் .9 கிண்ணம் 5



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்-புவி
பேணி வளர்த்திடும் ஈசன்"
-மகாகவி சுப்பிரமணியபாரதி-

அன்புச் சிறுவர் சிறுமியரே!

கோடை விடுமுறை வந்து விட்டது. உங்களுக்கும் கொண்டாட்டம் தான். நீங்கள் உலாப் போகும் நேரம் வந்து விட்டது. எத்தனை நகரங்களுக்குச் செல்வீர்கள். நாடுகளுக்குச் செல்வீர்கள். செல்லத்தான் வேண்டும். வீடு பள்ளிக்கூடம்- பள்ளிக்கூடம் வீடு என்று ஒரே முகங்களை எவ்வளவு நாள்தான் பார்த்துக் கொண்டிருப்பது. மனதுக்கும் உடலுக்கும் இதமாக, உற்சாகமாக வேறு இடங்கள் வேற்று முகங்கள், தூரத்தில் வாழும் நமது சொந்தங்களையும் கண்டு களிப்பது சந்தோஷம் தான்.

சரி, போகும் இடங்களில் நல்லவர்கள் என்று பேரெடுத்துக் கொள்ளுங்கள். மற்றவர்களோடு இனிமையாகவும், அமைதியாகவும் பேசப் பழகுங்கள். பலமாகச் சத்தம் போட்டு அடுத்த வீட்டுக்காரர்களோடு, நீங்கள் தங்கியிருக்கும் வீட்டுக்காரர்கள் பிரச்சனைப் பட வைத்து விடாதீர்கள். நீங்கள் நல்ல முறையில் நடந்து கொண்டால் மற்றவர்களும் உங்களிடம் நல்லவர்களாக நடந்து கொள்வார்கள். நல்லவர்களாக வாழ்வது எல்லோருக்கும் நல்லது தானே!

அன்புடன்
ஆசிரியை.

www.tamilarangam.net

## சார்லி சப்ளின்




ஜேர்மனி அரசு தன் படங்களைத் தடை செய்தது சார்லிக்கு மிகுந்த அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் கொடுத்தது. சார்லி தோற்றத்தில் ஜேர்மனிய சர்வாதிகாரியைப் போல

www.tamilarangam.net

இருப்பதாகவும், சார்லியின் (மேக்கப்) ஒப்பனை கூட ஹிட்லரின் தோற்றத்தை நினைவு படுத்துகின்றது என்பது தான் அது. சார்லியிடம் உடனேயே அடுத்த படத்திற்கான கரு பிறந்து விட்டது. படத்தின் பெயர் த கிரேட் டிக்டேக்கர் (The Great Dictator) . சார்லி இரட்டை வேடம் ஏற்பதென்று முடிவாகியது. சர்வாதிகாரியாகவும், முடி திருத்தும் தொழிலாளியாகவும் சார்லி இப்படத்தில் நடித்தார்.

இந்தப் படப்பிடிப்பு நடைபெறத் தொடங்கிய வேளையில் எதிர்பார்க்காமல் சார்லியின் ஆத்ம நண்பரும் படநிறுவனத்தின் முக்கியத்தருமாகிய ஃபேர்பாங்ஸ் (Fairbanks) காலமாகி விட்டார். இதனால் படநிறுவனத்தினர் படம் தணிக்கை செய்யப்படும்போது கஷ்டங்கள் ஏற்படலாம் மேலும் பிரிட்டனிலும் இங்கிலாந்திலும் படம் திரையிடப்படுவது . சிரமம் என்றும் சொன்னார்கள். அப்படியாயின் நானே இதனை முதலீடு செய்து திரையிடுகிறேன் என்றார் சார்லி.

படப்பிடிப்பில் ஒருதரம் அவரது மனைவியான பாலட் புதிய காரியதரிசியுடன் வந்தாள். விளம்பரங்களில் தனக்கு முக்கியத்துவம் தரவில்லை என்று அவள் அவ்வோடு வாதமிட்டாள். சார்லி அவளைக் கோபமுடன் பேசவே அவள் காரியதரிசியுடன் வெளியேறி விட்டாள். படம்

www.tamilarangam.net

முதல் முதலாக நியூயோர்க் திரையரங்கில் அரங்கேறியது. அப்போது படத்தைப் பார்த்த பிரமுகர் ஒருவர் படம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் வெற்றி பெறுமா என்பது சந்தேகத்துக்குரியது என்று சார்லியிடம் கூறினார்.

ஆனால் சார்லியின் மற்ற எல்லாப் படங்களையும் விட கூடுதல் இலாபத்தைத் தேடித் தந்ததாகச் சார்லி தனது சுயசரிதையில் குறிப்பிட்டிருக்கிறார். படம் திரையில் ஓடிக் கொண்டிருந்த காலத்தில் பாலட் வீட்டில் இருந்து தன் உடமைகளை எடுத்துக் கொண்டு வெளியேறி விட்டதாகச் சார்லியின் வேலையாளி சார்லியிடம் தொலைபேசியில் கூறினான். பின் சில நாட்களில் மெக்சிக்கோவில் இருந்து பாலட் விவாகரத்துக் கோரினாள்.

இதே வேளையில் ஜோன்பேரி என்னும் பெண் சார்லிக்கு அறிமுகமானாள்.

-தொடரும்-

நம்மால் எதை நன்றாகச் செய்ய முடியமோ, அதைச் செய்ய வைப்பவன் உண்மையான நண்பனே.

-எமர்சன்-

www.tamilarangam.net

## அழகான ஊர்

காலைக் கதிரவன் தான்
 கண் விழிக்கு முன்னெழுந்து
வேலைக்குச் செல்லுவதும்
 விரும்பி உழைப்பதுவும்

மாலையிலே மனைவி மக்கள்
 மாடாடு தம்முடனே
ஓலைக் குடிசையுள்ள
 ஊர் திரும்பி வீடடைந்து

பானைதனை அடுப்பேற்றி
 பக்குவமாய்க் கூழ் காய்ச்சி
வானமதி ஒளியினிலே
 மக்களுடன் வாசலிலே

கூழ் குடித்து நிம்மதியாய்க்
 குறட்டை விட்டுமே தூங்கி
வாழ்க்கை நிலைப்பதற்கே
 மறுநாளுங் காலையிலே

தலையிற் சுமையுடனே
 தாரமும் குழந்தைகளும்
நிலையாகப் பின்தொடர
 நடக்கின்றான் விவசாயி

விவசாயி வாழுகின்ற

www.tamilarangam.net

மேலான சிற்றூரே
அவனியிலே மேலதுவாம்
அழகு மிகக் கொண்டதுவாம்

வானுயர்ந்த தென்னைமரம்
வாழைமரம் பாக்குமரம்
தேனிறைந்த கனிகள் தரும்
சிற்றூரே வாழிய நீ

-லாவண்யா பாலேந்திரன்-



உன் சொற்கள் எப்படி இருக்கிறதோ அந்த அளவுக்கு நீ மதிக்கப்படுவாய். உன் அன்பின் தன்மைக்கு ஏற்றபடி உன் செயல்கள் இருக்கும். உன் செயல்களுக்கு ஏற்றபடி உன் வாழ்க்கை இருக்கும்.

-சோக்கிரடீஸ்-

www.tamilarangam.net

# மனோபலம்



பவேரிய நாட்டிற்கும், ஜேர்மன் நாட்டிற்கும் இடையே பெரிய விவாதம் மூண்டது. அதைச் சமாதானமாக்குவதற்காக எடுத்துக் கொண்ட எந்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது. இதனால் ஜேர்மனியின் சக்கரவர்த்தி பெரும் படையுடன் பவேரியாவின் தலை நகரைச் சுற்றி வளைத்துக் கொண்டார். பவேரியாவைப் கைப்பற்றிக் கொண்ட போதும் சக்கரவர்த்திக்குக் கோபம் அடங்கி விடவில்லை.

பவேரியாவின் தலைநகரையே அழித்துவிட எண்ணினார். அரசரே ஆனாலும் அவருக்கு சனங்களைப் பார்த்தபோது இரக்கம் ஏற்பட்டது. "பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் விடுதலை கொடுக்கிறேன். உங்களுக்குத் தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டு வெளியேறி விடுங்கள்." என்று ஆணை பிறப்பித்தார். பெண்களும் குழந்தைகளும் வெளியேறியபின்

www.tamilarangam.net

தலைநகரைக் தீக்கிரையாக்கும் படி ஆணையிட்ட சக்கரவர்த்தி பாசறைக்குத் திரும்பினார்.


பவேரிய நாட்டுப் பெண்களும் குழந்தைகளும் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர். பாசறையில் இருந்தவாறே சக்கரவர்த்தி சனங்கள் வெளியேறுவதைக் கவனித்துக் கொண்டிருந்தார். பெண்கள் சுமக்க முடியாத பாரங்களைச் சுமந்து கொண்டு செல்வதைக் கண்டார். அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அருகே சென்று உற்று நோக்கினார். அவர்கள் மனித உடல்களை அல்லவா சுமந்து செல்கிறார்கள். அவர்கள் சுமந்து சென்றது தங்கள் தங்கள் கணவர்மார்களைத் தான். பவேரிய மன்னனை அவனது இராணி சுமந்து சென்றாள்.



இச் சம்பவம் சக்கரவர்த்திக்கு வேதனையைத் தந்தது. மனம் இரங்கிய அவர் பவேரியாவுக்கு மன்னிப்புக் கொடுத்து விட்டார்.

www.tamilarangam.net

# ஏமாளிகள்



இராமு வீட்டில் தனியாக இருந்தார். அவரது மனைவியான மங்களம் கடைக்குச் சமையல் சாமான்கள் வாங்கி வரச் சென்றிருந்தார். வீட்டின் கதவு தட்டப்படும் சத்தம் கேட்கவே, இராமு கதவைத் திறந்தார். அவரது நண்பர்களான வேலாயுதமும் பரமுவும் நின்றிருந்தார்கள். இராமுவுக்குச் சந்தோஷமாக இருந்தது. தனிமையாக இருப்பதை விடவும், நண்பர்களுடன் ஆனந்தமாகப் பொழுதைப் போக்கலாம். அவர்களைச் சந்தோஷமாக வரவேற்றார்.

www.tamilarangam.net

ஒன்றரை மணித்தியாலம் எப்படிப் போனது என்று தெரியாமலே இருந்தது. கதவு திரும்பவும் தட்டப்பட்டது. இராமு கதவைத் திறந்தார். "தணிகாசலம் ஐயா, வீடு இதுதானே!. உங்களுடைய மனைவி எங்களுடைய கடையில் மளிகைச் சாமான் வாங்கினார். உங்களிடம் கொடுத்து விட்டு நூற்றிஐம்பது ரூபாய் வாங்கச் சொன்னார்." என்று சொல்லி விட்டு, கொண்டு வந்த சாமான்களை வைத்து விட்டுப் பணத்தை வாங்கிக் கொண்டு போய் விட்டான்.

"சமையல் சாமான்களானதால் மனைவி வந்து பார்த்துக் கொள்ளட்டும். பரமுவுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்து விட்டேன். பரமு உனக்குப் மனைவி வரட்டும். அவளிடம் பணம் வாங்கித் தருகிறேன்." என்று கூறிவிட்டுச் சாமான்களை ஒரு பக்கத்தில் வைத்து விட்டார். சிறிது நேரத்தில் மங்களம் வாடகைக்காரில் வந்து இறங்கினாள். சமையல்சாமான்கள் எல்லாம் அவள் உள்ளே கொண்டு வந்து வைத்தாள்.

நண்பர்கள் இருந்தபோதும் இராமுவுக்குக் கோபம் கோபமாக வந்தது. "என்ன வீட்டில் கல்யாணம் நடத்தப் போகின்றாயா? இப்போது தானே ஒருஆள் சாமான்கள் கொண்டு வந்து வைத்து விட்டுச் சென்றிருக்கிறான். நீயும் அவ்வளவு சாமான்கள் கொண்டு வந்திருக்கிறாய்!"

www.tamilarangam.net

என்று மனைவியிடம் கோபத்தை அடக்கிக் கொண்டே கேட்டார்.

"நான் இப்போ தானே வருகிறேன். யாரிடமும் சாமான்கள் நான் கொடுத்து விடவில்லையே!" என்று மங்களம் கூறவே, இராமுவுக்குத் திகைப்பாக இருந்தது. எல்லோருமே திகைத்து விட்டனர். மூலையில் இருந்த பெட்டியைத் திறந்து பார்த்தனர். அதற்குள் இருந்த பைகள் ஒவ்வொன்றுக்குள்ளும் மண்ணும் கல்லும் கட்டி வைக்கப்பட்டிருந்தது. நண்பர்கள் எல்லோரையும் மங்களம் பார்த்தாள். "உலோபிக்கு இரட்டிப்புச் செலவு என்பது போல காசையும் அல்லவா கொடுத்து விட்டீர்கள்." என்று வேதனையோடு கூறினாள்.

ஏமாளிகள் இருக்கின்ற வரையில் ஏமாற்றுபவர்கள் இருந்து கொண்டுதான் இருப்பார்கள்.



www.tamilarangam.net

## வினாவிடைப்போட்டி

1. இந்தியாவில் குகைச் சிற்பங்களுக்குப் பெயர் பெற்றது?
   அந்தரம், கஜமுகன், சுந்தரி, ஆதாயம்

2. வெடி மருந்தை உலகத்துக்கு அறிமுகம் செய்தவர்கள்?
   சீதனம், பனம்பழம், பயிர், அறிமுகம், கள்ளன்.

3. இரண்டாம் உலகப்போரில் நாசமான இரண்டு நகரங்கள் எவை?
   ஹிந்தோளம், உரோமம், பட்ஷி, செரிமானம் - நாக்கு, அதிகம், அசாத்தியம், அசமுகி.

4. பௌத்த மதத்தை அயல்நாடுகளில் பரப்பிய சக்கரவர்த்தி இவர்?
   அவதானி, பூஞ்சோலை, மாங்கனி, இன்னல்

5. சுவாமி விவேகானந்தரிடம் சீடராகச் சேர்ந்த வெளிநாட்டுப் பெண் இவர்?
   அந்நியன், நிவேதனம், அதிகாரி, அன்னதானம்

முடிவு திகதி: *19.07.98*

www.tamilarangam.net

## குனிவும் பணிவும்



கேசவன் பக்கத்து வீட்டு மணியோடு விளையாடிக் கொண்டிருந்தான். திடீரென்று இருவருக்கும் சண்டை வந்து விட்டது. கேசவன் பணக்காரப் பையன். மணி ஒரு ஏழை ஆசிரியரின் பையன். மணி கையைக் கட்டிக் கொண்டு நின்றான். கேசவன் மணியைக் கோபத்தோடு பேசினான். மணி பிழை ஏதும் செய்யவில்லை. ஆனாலும் கேசவன் மணியைக் கண்டபடி பேசினான்.



அருகில் இருந்த தாத்தா இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார். மணி தன் வீட்டுக்குப் போய் விட்டான். மாலை நேரம் வந்தது. தாத்தா கேசவனையும் அழைத்துக் கொண்டு தெருவில் இறங்கிக்

www.tamilarangam.net

காலாற நடக்கத் தொடங்கினார். கேசவன் தாத்தாவோடு கதைத்துக் கொண்டு நடந்தான். திரும்பி வீட்டுக்கு வரும்போது இலேசாக இருளத் தொடங்கி விட்டது.

வழியில் உள்ள மின்கம்பங்களில் இருந்த மின்விளக்குகள் எரியத் தொடங்கி இருந்தன. கேசவன் திடீரென்று சிரித்தான். தாத்தா கேசவனைப் பார்த்து, “கேசவா ஏன் சிரிக்கிறாய்?” என்று கேட்டார். அதற்குக் கேசவன் தாத்தாவைப் பார்த்துத் “தாத்தா, வளைந்து குனிந்திருக்கும் லைற்றைப் பாருங்கள். நான் பேசும்போது மணியும் அப்படித்தான் இருப்பான்.” என்று சொல்லிப் பெரிதாகச் சிரித்தான்.

தாத்தா தொண்டையைக் கனைத்துக் கொண்டே, “கேசவா, அந்த லைற் வளைந்து குனிந்துதான் இருக்கிறது. ஆனால் இரவில் அது இல்லாவிட்டால் மனிதர்களாகிய நாங்கள் எவ்வளவு கஷ்டப்படுவோம். ஆனால் என்னால் தானே மனிதர்கள் வெளிச்சம் பெறுகிறார்கள்

www.tamilarangam.net

என்று பெருமையில்லாமல் அடக்கத்தோடு குனிந்தபடியே வெளிச்சத்தைத் தருகிறது. மணியும் அப்படித்தான் உனக்குப் புரிகின்றதா?" என்று கேட்டார்.

கேசவன் மௌனமாக யோசித்தான். தாத்தா அவனிடம் திரும்பவும் "நான் சொல்வது உனக்குப் புரிகிறதா. கேசவா?" என்று கேட்டார். கேசவன் ஆம் என்று தலையாட்டினான். அன்று தொட்டு மணியிடம் அவன் சண்டை போட்டுக் கொள்வதேயில்லை.

---

வாழ்க்கையில் சறுக்கி விழாமல் இருப்பது, தோல்வியைக் காணாமல் இருப்பதெல்லாம் பெருமைப்படக் கூடிய விஷயமல்ல. கீழே விழுந்த போதெல்லாம் எப்படியாவது எழுந்து விடுகிறோமே அதுதான் பெருமைக்குரிய விடயம்-

-கவிஞர் கண்ணதாசன்-

---

www.tamilarangam.net

# சொற்களைக் கண்டு பிடியுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சு | ந் | த | ர | ம் | பா | ட் | டு | ட் | த |
| ணை | உ | ச் | சி | ண | ம் | ப | ட் | சி | ங் |
| ரு | ப | டி | ட் | த | ஜு | ல் | சி | ர | க |
| எ | கா | ட் | சி | வ | ம் | 4 | ஜ | ம் | ம் |
| ள் | ர | க | ம் | ம | வ | து | வு | ர் | 4 |
| ற | ம் | ப | ப் | அ | வு | மா | ன | ம் | ள் |
| கு | ம | ர | ண் | ம | ஞ் | ச | ள் | து | ளி |
| ற் | சு | ந் | தி | ர | ண் | டு | வு | டி | வ |
| தி | மா | து | டி | ன் | சு | இ | ண் | ம | ம் |
| கு | இ | ரை | ம | து | ம் | ம | ல் | ன | 4 |

முடிவு திகதி : 19.07.98

www.tamilarangam.net

***வினாவிடைப்போட்டி முடிவுகள்.***

1. சீன நாட்டு நாணயத்தின் பெயர் இது.
   யுத்தம், அத்திவாரம், பன்மை (யுவான்)

2. அடிமை வியாபாரத்தை எதிர்த்த முதல்நாடு இது.
   சுண்டெலி, அன்பு, மார்பு, போர், பக்கம்.
   (டென்மார்க்)

3. வருமானவரியை தொடக்கிய நாடு இது.
   இல்லம், பங்கம், கிடங்கு, பலா, பந்து, துணை.
   (இங்கிலாந்து)

4. எதிரோப்பியாவின் பழைய பெயர் இது.
   அன்னம், தும்பி, சீதை, பனி, யானை.
   (அபிசீனியா)

5. இலங்கையின் பிரசித்தமான குகை ஓவியங்கள் உள்ள இடம் இது.
   சிலாபம், கிளி, பரிவு, யாத்திரை. (சிலாபம்)

www.tamilarangam.net

எழுதியவர்கள்:

| | |
|---|---|
| மோகன் இரத்தினசபாபதி | Eschelbronn |
| ஜெயமாலா இரத்தினசபாபதி | Eschelbronn |
| ஜெயதீபா இரத்தினசபாபதி | Eschealbronn |
| முகுந்தன் மகேந்திரன் | Berg.Gladbach |
| மஞ்சுளா சிவசம்பு | Lohmar |
| அபிராமி பரமேஸ்வரன் | Denmark |
| ஜெயசாந் மனோரஞ்சிதராஜா | Münster |
| கிரிசாந் மனோரஞ்சிதராஜா | Münster |

அடையாளமிடப் பட்ட பெயருக்குரியவர் இம்முறைக்கான பரிசைப் பெறுகிறார். "புராண சிறுவர் கதைகள் என்னும் புத்தகம் இவருக்குப் பரிசாகக் கிடைக்கிறது.

பணத்தைக் கெட்ட வழிகளில் இழப்பது குற்றம். ஆனால் தீய வழிகளில் செலவழிப்பது அதை விட க் குற்றம்.

-ரங்கின்-

www.tamilarangam.net

# நீதி



அரசனான சிங்கம் காட்டை நன்றாகத் தான் ஆட்சி செய்து வந்தது. மிருகங்கள் அரசனிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தன. அன்பும் கருணையும் கொண்ட அரசனிடத்தில் யாருக்குத்தான் விருப்பம் இல்லாமல் இருக்கும். இப்படி நல்ல குணம் கொண்டவர்களைச் சந்தர்ப்பவாதிகள் பயன்படுத்திக் கொள்வதுண்டு.

நரி அறிவுக்கூர்மை உள்ளதென்று எல்லோரும் சொல்லுவதால், நரியாரே கணக்கப்பிள்ளை அதாவது, நிதிஅமைச்சராகப் பணியாற்றி வந்தது. அந்த வருடத்துக்கான வரவுசெலவுக் கணக்குகளைச் அரசசபையில்

www.tamilarangam.net

சமர்ப்பிக்கும் நாள் வந்தது. அரசநிதியில் இருந்து சிறிதுசிறிதாகப் பணத்தைக் களவாடி வந்தது நரி. அரசனான சிங்கம் தான் சொல்லுவதை எல்லாம் நம்புவது, நிதிஅமைச்சருக்குச் சாதகமாக இருந்ததால், இந்தமுறை கூடுதலாகக் நிதியைக் களவாடி இருந்தது நரி.

அரசசபை கூடியது. நிதிஅமைச்சரரன நரி வரவுசெலவுத் திட்ட அறிக்கையை வாசித்தது. கணக்குவழக்கில் பிழை இருப்பதை அமைச்சரான யானை கண்டு கொண்டது. நரி எவ்வளவு சமாளித்துச் சொல்லியும் சபையில் எடுபடவில்லை. நரி முன்பு செய்த கள்ளத்தனமெல்லாம் பிடிபட்டன. அதனால் நரி காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டது.

நீதிமன்றத்தில் நரி களவாடியது என்று தெரிந்தாலும், சாட்சிகள் சரிவர அமையாததால் நரி தப்பித்துக் கொண்டது. ஆனாலும் நரிக்குத் தெரியாமல் ஒற்றர்களை நியமித்தது சிங்கம். நரி வெளியே வந்து தெருவில் இறங்கி நடந்தது. கூடவே, அதற்குத் தெரியாமல் ஒற்றனான முயல் பின்னால் கூடவே தொடர்ந்தது.

வழியில் நரிக்கு எதிரே வந்த காட்டுப்பூனை திரும்பி ஓடியது. நரி அதனை மடக்கிப் பிடித்தது. "பூனையாரே, நான் எவ்வளவு கஷ்டப்பட்டு பெரியவனாகிறேன். அரசநிதியில்

www.tamilarangam.net

இருந்து எவ்வளவு ஜாக்கிரதையாகப் பணத்தை களவாடுகின்றேன். அதை வட்டிக்கு உனக்குக் கொடுத்தேன். நீ ஏமாற்றி விட எண்ணி விட்டாயா? இந்த முறை நீ தப்ப முடியாது." என்று மிரட்டியது.

காட்டுப்பூனை ஒருவாறு தப்பித்துக் கொண்டு ஓடியது. அதன்பின் தன் இருப்பிடத்தை நோக்கி நரி சென்று கொண்டிருந்தது. அப்போது சேவகர்களாகிய ஓநாய்கள் பாய்ந்து பிடித்துக் கொண்டன. அதன்பின் நரி செய்த குற்றத்துக்குத் தகுந்த தண்டனையை அடைந்தது.

---

தீமைக்குத் தீமை செய்தவர்களைச் சான்றோர் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. அதைப் பொறுத்துக் கொண்டவர்கள் போற்றப் படுகிறார்கள்.

-திருவள்ளுவர்-

---

---

கொடியவர்கள் பயத்தினால் அடங்கி நடப்பார்கள். ஆனால் நல்லவர்கள் அன்புக்கே அடங்கி நடப்பார்கள்.

-அரிஸ்ரோட்டில்-

---

www.tamilarangam.net

# இந்தோனேசியா

இந்தோனேசியா தனியான ஒரு நாடல்ல. இது ஒரு தீவுக் கூட்டம். இது கிட்டத்தட்ட 13000 தீவுகளைக் கொண்ட ஒரு நாடாகும். இவை இந்து சமுத்திரத்தில் இருக்கின்றன. தாய்லாந்து, கம்போடியா, பிலிப்பைந்து தீவுகளுக்கு கீழே, அவுஸ்ரேலியாவுக்கு மேல் அமைந்திருக்கின்றது. இதன் பரப்பளவு 1904569 சதுர கிலோமீற்றர் ஆகும்.


இங்கு 164 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். தலை நகரம் ஜகார்த்தா. மக்கள் கிட்டத்தட்ட 250 மொழிகளைப் பேசுகிறார்கள். ஆனால் அரசகருமமொழி **Bahasa** மொழியாகும். நாடு குடியரசு நாடாகும். இந்நாட்டு நாணயத்தின் பெயர் **Rupiah (Rp)** ஆகும். இங்கு 88 வீதமான மக்கள் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுகிறார்கள்.

நாடு வெப்ப வலயத்தில் இருப்பதால் மழைக் காடுகள் நிறைந்து காணப்படுகின்றது. இங்கு நெல், கரும்பு, மரவள்ளிக் கிழங்கு, கோப்பி, தென்னை என்பன பிரதான உற்பத்திப் பொருட்கள் ஆகும். இங்கு உணவு தயாரித்தல், விவசாயப் பொருட்கள் உற்பத்தி, ஆடைகள் தயாரித்தல் போன்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன.

-கபிலன் பரமசிவம்-

www.tamilarangam.net

## பறவைகள்



பேசும் பறவைகளான கிளி, மைனா போன்றவைகள் தாயிடமிருந்து தான் பேச்சுத் திறமையைக் கற்றுக் கொள்கின்றன. பிரித்து வளர்த்தால் இவை பேசுவதில்லை. முட்டையில் இருந்து வெளிவந்தவுடன், வேறு பறவைகளுடன் சேர்த்து வளர்த்தால் அவைகளைப் போலவே பேசத் தொடங்கி விடும். இதனால் தான் இவை மனிதர்கள் வளர்க்கும் போதும் மனிதர்களைப் போலவே பேசுகின்றன.

அது மட்டுமல்ல தன் இனப் பேச்சுக்களையே மறந்து விடுகின்றன. இவைகள் தம் இனத்தோடு திரும்பவும் சேர்வதில்லை. லாமர்கையர் என்னும் தாடிக்கழுகு மிருகங்களின் எலும்புக் கூடுகளை 200 மீற்றருக்கும் மேலாக நின்று கொண்டு பாறைகளில் போட்டு உடைக்குமாம். உடைந்த எலும்புக்குள் இருக்கும் திரவப்பகுதியைத் தன் குஞ்சுகளுக்கு உண்ணக் கொடுக்கும்.

www.tamilarangam.net

ஆர்ட்டிக்டெர்ன் என்னும் பறவை ஒவ்வொரு குளிர் காலத்திலும், இடம் பெயர்ந்து போகவும் வரவுமாக; 30.000 கி.மீ பறந்து தம் இருப்பிடத்தை வந்து சேருகின்றன.

## தங்கக் கழுகு



தங்கக் கழுகு என்பது கழுகு இனத்தில் ஒன்றாகும். பூமத்திய ரேகைக்கு வடக்கில் உள்ள பிரதேசங்களில் காணப்படுகின்றன. இந்தியாவின் இமய மலைத்தொடரில் 1220மீ உயரமுள்ள இடங்களில் காணப்படுகின்றது. இவை சிறகுகளை அடிக்கடி அடித்துக் கொண்டு பறப்பதில்லை. சிறகுகளை நன்றாக

www.tamilarangam.net

விரித்துக் கொண்டு, காற்றில் மிதந்து கொண்டே பறக்கும். இதனால் இவைகள் களைப்பதில்லை.

இணையாக, அதாவது ஆணும் பெண்ணும் சோடியாக வாழும் தன்மை கொண்டவை. பெண்கழுகு ஆண்கழுகை விடவும் தோற்றத்தில் பெரியது. ஒவ்வொரு இணைக் கழுகுகளும், தங்களுக்கென்று குறிப்பிட்ட ஒரு இடத்தைத் சொந்தமாக்கி வாழுகின்றன. அந்த இடத்திலேயே தங்கள் உணவையும் தேடிக் கொள்ளுகின்றன. கால் நகங்களும், அலகும் மிகவும் கூர்மையாக இருக்கும். 250மீ தூரம் வரைக்கும் தன் பார்வையைச் செலுத்தும் கூர்மையான பார்வை இதற்குண்டு.

பறந்து செல்லும் பறவைகளை, குப்புறக் கவிழ்ந்தவாறே பறந்து வந்து சுளுவாகப் பிடித்து விடுகின்றன. கூர்மையான நகங்களால் பிடிக்கும்போதே பறவைகள் இறந்து விடுகின்றன. இரையைச் சிறிது நேரத்துக்குத் தன் சிறகுகளால் மூடி வைத்திருந்து விட்டுத் தன் இருப்பிடத்துக்குக் கொண்டு சென்று தன் இணையுடன் சேர்ந்தே சாப்பிடுகின்றன. இரையாகும் பறவைகளின் எலும்பு, சிறகு முதலியவைகளை இலகுவாக வெளியேற்றி விடுகின்றன.

www.tamilarangam.net

இவைகளின் இனப் பெருக்க காலம் பங்குனி மாதம் ஆகும். ஆண் பறவை பலவிதமான விளையாட்டுக்களைச் செய்து பெண்பறவையை தன்னைக் கவரச் செய்கின்றது. பின் இரண்டும் இணைந்து கொள்கின்றன. பெண் இரண்டு முட்டைகள் இடும். இதற்காகப் புதிதாக இவை கூடு கட்டிக் கொள்ளுவதில்லை. தாங்கள் வாழ்ந்து வரும் கூட்டிலேயே முட்டையிடுகின்றன. குஞ்சுகள் பொரிக்க நாற்பது நாட்கள் எடுக்கும்.

முதலில் தாயும் தந்தையும் உணவைக் குஞ்சுகளின் வாயில் வைத்தே ஊட்டுகின்றன. பின் குஞ்சுகளின் நகங்கள் வளர்ந்த பின், வேட்டையாடிய பறவைகளை அவைகளிடமே விட்டுவிடும். நகங்களும், அலகுகளையும் குஞ்சுகள் பிரயோசனப் படுத்தத் தொடங்கியதும், சிறகுகளும் வளர்ந்து விடுகின்றன. தாங்களே உணவு தேடத் தொடங்கியதும் குஞ்சுகள் தாங்களாகவே பிரிந்து போய் விடுகின்றன.

பழைய காலத்தில் ஆசியாவின் மத்திய பகுதியில் வாழ்ந்தவர்கள் ஆட்டு மந்தைகளை ஓநாயிடம் இருந்து காப்பாற்ற தங்கக்கழுகை வளர்த்து வந்தார்கள்.



## முயற்சி

படித்தவர்கள் தான் பெரிய மேதைகள் என்னும் எண்ணம் எல்லோருக்கும் உண்டு. படித்தவர்களுக்கு அறிவு வளர்ச்சி அடையும் என்பது உண்மையே. ஆனாலும் பாமரர்களும் மேதைகளாகி இருக்கிறார்கள். ஆசிரியரால் மூளை வளர்ச்சி இல்லாதவர் என்று வர்ணிக்கப் பட்டவர் தோமஸ் அல்வா எடிஸன். விமானத்தைக் கண்டு பிடித்தவர்களான ரைட் சகோதரர்கள் படிப்பில் திறமையானவர்கள் இல்லை. சாதாரண படிப்போடு தான் இவர்கள் திறமையை உலகறியச் செய்தார்கள்.

சாய் லூன் என்பவர் சீன நாட்டினர். வறுமையில் கஷ்டப்பட்டவர். பள்ளிப்படிப்பு இவருக்குக் கிடைத்திருக்குமா?. இவரின் கண்டு பிடிப்பு முழு உலகத்துக்குமே திருப்புமுனை. சாய் லூனின் கண்டு பிடிப்பில் மகிழ்ந்து சீனச் சக்கரவர்த்தி அரசசபையில் பிரபுவாக்கினார். இவர் தன் முயற்சியால் கண்டு பிடித்தது காகிதம்.

கல்வி அறிவு விரிவடைய உதவும். ஆனால் மனிதன் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு முயற்சியும் தேவை. அறிவு மட்டும் வாழ்வாகாது. இதனையே பெரியவர்கள் "முயற்சி உயர்வைத் தரும்." என்று கூறியிருக்கிறார்கள்.

www.tamilarangam.net



## உழைப்பின் உயர்வு

வசதி படைத்த பணக்காரர் ஒருவர் இருந்தார். அவர் தன் வசதியையும் பணத்தையும் பெருக்க எண்ணினார். தனக்குக் கீழே வேலை செய்யும் வேலையாட்களில் திறமையானவர்கள் எனத் தான் கருதிய மூவரைத் தேர்ந்தெடுத்தார். அவர்களுக்குள்ளும் திறமை கூடியவனுக்கு ஐயாயிரம் ரூபாயும், அடுத்த திறமையானவனிடம் முன்னூறு ரூபாயும், மூன்றாவது திறமைசாலிக்கு ஆயிரம் ரூபாயும் கொடுத்தார்.

"கொடுத்த பணத்தை உங்கள் வசதிக்கு ஏற்ற வகையில் பணம் புரட்டுங்கள். நான் வெளிநாட்டில் சென்று வாழ எண்ணுகிறேன். உங்களை எப்போ சந்திப்பேன் என்று திடமாகக் கூற முடியாமல் இருக்கிறது. ஆனால் எப்போதோ சந்திப்பேன். அப்போது உங்கள் திறமையை அறிவேன்." என்றார். பின்பு விடை பெற்றுக் கொண்டு வெளி நாட்டுக்குச் சென்று விட்டார்.

சில ஆண்டுகள் கழிந்தன. ஐயாயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டவன், பொறுப்போடு புடவைக்கடை

www.tamilarangam.net

வைத்து பணத்தை இரட்டிப்பாக்கினான். நகரத்திலேயே புகழ் பெற்ற புடவைக்கடையாக அவனது கடை இருந்தது. மூவாயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டவன் சிறு பலசரக்குக்கடை நடத்தினான். இலாபத்தை வங்கி ஒன்றில் போட்டு, முதலைப் பெருக்கினான். மூன்றாவது வேலையாளோ, பணத்தை எதுவும் செய்யாமல் பெட்டிக்குள் போட்டு வைத்தான்.

திடீரென ஒருநாள் பணக்காரர் ஊருக்கு வந்தார். வேலையாட்கள் ஒவ்வொருவரிடமும் சென்றார். முதல் இரண்டு வேலையாட்களின் திறமை அவருக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது. மூன்றாவது வேலையாளோ பணக்காரனைப் பார்த்து, "நீங்கள் திரும்பி வருவீர்கள் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் பணத்தைப் பெட்டிக்குள் வைத்திருந்தேன். இந்தாருங்கள்." என்றான்.

அதைக் கண்டதும் பணக்காரருக்குக் கோபம் வந்தது. "கிடைத்த பணத்தைப் பயன் படுத்தத் தொரியாத நீ உழைப்பின் உயர்ச்சியைப் பற்றி அறியாதவன். நீ என்னிடம் வேலையாளாக இருக்க முடியாது. உன்னை வேலையில் இருந்து நீக்கி விடுகின்றேன்." என்று கூறிப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வேலையை விட்டு நீக்கினார்.

www.tamilarangam.net



# மகாத்மா

மகாத்மா காந்தி சேவா ஆச்சிரமத்தில் தன் மனைவியான கஸ்தூரிபாயுடனும், மற்றைய தொண்டர்களுடனும் வாழ்ந்து வந்தார். மகாத்மாகாந்தியின் மகன்களில் ஒருவரான ராம்தாஸ்காந்தி தங்கள் ஊரிலிருந்து வந்திருந்தார். மகன் ஊருக்குப் போகும்போது கொடுத்து விடுவதற்காக, அன்னையான கஸ்தூரிபாய் மகன் கொண்டு செல்வதற்காகப் பலகாரம் செய்யத் தொடங்கினார்.

அவர் துரிதமாக வேலை செய்வதைக் கண்ட காந்தி, "என்ன செய்கிறாய்?" என்று கேட்டார். கஸ்தூரி "ராம் ஊருக்குப் போகிறானல்லவா' அவனுக்குச் சிறிது பலகாரம் செய்கிறேன்." என்றார். அப்போது காந்தி "இங்கிருந்து ஊருக்குச் செல்லும் எல்லோருக்கும் நீ பலகாரம் கொடுத்து அனுப்புவாயா?" என்று கேட்டார்.

"இல்லை" என்று சொன்னார் கஸ்தூரி. "ஏன், அவர்கள் எல்லோரும் உன் குழந்தைகள் இல்லையா?" என்று காந்தி தம் மனைவியிடம் கேட்டார். ஒரு சாதாரண மனிதன் மகாத்மா என்று போற்றப் படுவதற்கு இது ஒரு சிறு சம்பவம். ஒன்றாகச் சேர்ந்து வாழும்போது தன் மகனாக இருந்தாலும் சலுகை பெறுவதைக் காந்தி விரும்பவில்லை.

www.tamilarangam.net

Nektar für die Kinder

Nectar pour les enfants

Nectar for the childrens



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்

"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
02271 / 66527

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்